**செய்தி வெளியீடு எண்:599** **நாள்: 12.09.2017**

# செய்தி வெளியீடு

## பேரறிஞர் அண்ணா 109 - ஆவது ஆண்டு பிறந்தநாளில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா

## தமிழ் வளர்ச்சித் துறை - தமிழ் மன்றப் போட்டிகள்

பள்ளி, கல்லூரி மாணவர்களின் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட / மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத்தொகை வழங்க மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2003 - 2004ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கென இந்தாண்டு ரூபாய் 53.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் 2017 - 2018ஆம் ஆண்டிற்கு கல்லூரி மாணவர்களுக்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2017ஆம் நாளன்று காலை 10மணி முதல் அனைத்து மாவட்டங்களிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. முதல் பரிசு ரூ.10,000/- இரண்டாம் பரிசு ரூ.7,000/- மூன்றாம் பரிசு ரூ.5,000/- என வழங்கப்படும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டியில் கலந்துகொள்வர். மாநில அளவில் ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ.15,000/- இரண்டாம் பரிசு ரூ.12,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- என வழங்கப்படும். மேலும், மாவட்ட அளவில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு பெற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையால் ஒருவார காலம் நடத்தப்பெறும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சிபெற அழைக்கப் பெறுவார்கள். இவர்களுக்கு ஒருவார காலம் உணவு, உறைவிடம், போக்குவரத்துக் கட்டணம் ஆகியன வழங்கப்படும். இதற்கென ரூபாய் 20.00 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர்களால் போட்டிகள் நடத்தப்பெறும். இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் கல்லூரி முதல்வர் / துறைத்தலைவரிடம் உரியப் படிவத்தில் அனுமதிபெற்று பங்கேற்றல் வேண்டும். போட்டிக்கானத் தலைப்புகள் போட்டி நடைபெறும் நேரத்தில் அறிவிக்கப்படும். கலந்துகொள்வதற்கான உரிய படிவம் மற்றும் விதிமுறைகள் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் (tamilvalarchithurai@gmail.com) இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**